Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 194/2020

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | காளியப்பன் |
| Father's Name | : | சுப்பராயன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1972 of the day of 22.06.2022

முதல் விசாரணை

நான் கரூர் காமராஜபுரம் மேற்கு ராம்நகரில் குடியிருந்து வருகிறேன். நான் வேலை செய்து வருகிறேன். கடந்த 24 வருடங்களுக்கு மேலாக கரூர் ஈஸ்வரன் கோவில் அருகிலுள்ள செல்வவிநாயகாடிராவல்ஸ் என்ற பெயரில் சொந்தமாக வேன் வைத்து ஓட்டி தொழில் செய்து வருகிறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளன. இருவருக்கும் திருமணமாகிவிட்டது. இளையமகள் தேவகி எம்.சி, எம்பில்,பிஎட் முடித்துவிட்டு வேலை

ஒம்.K.அம்பிகா

அசா 1 காளியப்பன் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

தேடிக்கொண்டு இருந்தார். என் ஸ்டான்டில் சுபம் டிராவல்ஸ் என்ற பெயரில் எதிரி பாலமுரளி வேன் வைத்து ஓட்டிவ ந்தார். ஆதலால் அவரை எனக்கு நன்கு தெரியும். நான் எனது மகளுக்கு வேலை தேடிக்கொண்டு இருக்கும் விசயம் தெரிந்து அரசு கலைக்கல்லூரியில் பேராசியர் வேலை வாங்கி தருவதாகவும் தனக்கு அரசியல் வாதிகள் பழக்கம் இருப்பதாகவும், அதன் மூலம் வேலை வாங்கி தருவதாகவும் என்னிடம் கூறினார். அதற்கு 10 லட்சம் செலவாகும் என்று சொன்னார். உடனடியாக எனக்கு 7 லட்சம்பணம் கொடுத்துவிடுங்கள். மீதி பணம் வேலைகிடைத்த பிறகு வாங்கி கொள்கிறேன் என்று சொன்னார். நானும் என் மகளின் எதிரிகாலத்தை கருத்தில் கொண்டு 10,01.2018 ம் தேதி கரூர் ஈஸ்வரன் கோவில் வடபுறம் ் உள்ள கஸ்தூரி பாய் மருத்துவமனை முன்பு ரொக்கமாக 4 லட்சம் கொடுத்தேன். அப்போது என்னுடன் வேன் ஓட்டும்டிரைவர் பாஸ்கரன் என்பவர் உடன் இருந்தார். அவர் தான் என்னிடம் பணம் வாங்கி எண்ணி கொடுத்தார். 4 லட்சத்தை பெற்றுக்கொண்டு 8 மாதத்திற்குள் கொடுத்துவிடுவதாக சொன்னேன். 8 மாதத்திற்குள் வேலை கிடைக்காவிட்டால் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாகவும் டைப் செய்து என்னிடம் எழுதி கொடுத்துள்ளார் . அதில் பாஸ்கரன் சாட்சி கையெழுத்து செய்துள்ளார். பின்பு 19.04.2018 ம் தேதி நானும் என் உடன் வண்டி ஓட்டும் சரவணன் என்பவருடன் எல்என்எஸ் கேவிபி வங்கியின் கிளையில் எனது அக்கவுண்டடில் இருந்து 3 லட்சம் ரூபாயை வெங்கமேடு கிளையில் உள்ள கேவிபி வங்கியின் பாலமுரளி அக்கவுண்டடில் அனுப்பி வைத்தேன். அதனபிறகு வேலை வாங்கி கொள்ளலாம் என்று சொல்லி அரசின் முத்திரையிட்ட ஒரு சீட்டை என்னிடம் கொடுததார். அதன்பிறகு நாள் கடத்தி கொண்டு சென்றார். 12.02.2019 ம் தேதி என்னிடம் வந்து காலை 10.00 மணிக்கு கஸ்தூரிபாய் மருத்துவமனை அருகில் பிளாட்பார்மில் நான் என் மகளுக்கு கொடுத்த பணம் வேலை என்னாச்சு என்று கேட்டதற்கு உனக்கு பணமும் கிடையாது வேலையும் கிடையாது என்று சொன்ானர். என்ன் இப்படி சொல்கிறாய் என்று கேட்டதற்கு கெளுட்டுதாயோலி என்று என்னை திட்டி வண்டியில் இருந்த ஜாக்கி ராடை எடுத்துக்கொண்டு பணத்தை கேட்டால் அடித்துக்கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். அங்கு இருககம் நபர்கள் சத்தம் போட்டதால் சென்றுவிட்டனர். அவரை பற்றி நான் விசாரித்தபோது பணத்தை வாங்கி கொண்டு வேலை வாங்கி தராமல் ஏமாற்றியுள்ளார் என்று தெரியவந்தது. பின்பு மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும் போது அவர் எனக்கு எழுதி கொடுத்த ஆவணம், நான் பேங்கில்கட்டிய

ஒம்.K.அம்பிகா

அசா 1 காளியப்பன்

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

செலான் ஆகியவற்றை ஒரிஜனலை கொடுத்தேன். அவர்கள் பார்த்துவிட்டு நகலை பெற்றுக்கொண்டு ஒரிஜனலை என்னிடம் தந்துவிட்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அசாஆ 1. கேவிபி வங்கியில் செலுத்திய 3 லட்சத்திற்கான செலான் நகல் அசாஆ 2. எனக்கு எழுதி கொடுத்த ஆவணம் அசாஆ 3. போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்.K.அம்பிகா
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.